www.malankaralibrary.com

# குமரி மாவட்டத்தில் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் நற்செய்திப் பணியில் பெதனி துறவற சகோதரிகளின் பங்கேற்பு

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத் 28:19) என்ற இறைமகன் இயேசுவின் கட்டளையை ஏற்று நற்செய்திப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள் ஏராளம்.மறு ஒன்றிப்பு வழியாக மலங்கரை கத்தோலிக்க திருச்சபையை நிறுவிய இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகை நற்செய்திப் பணியை சிறப்புடன் செயல்படுத்தும் நோக்குடன் பெதனி துறவற சமூகத்தை தோற்றுவித்தார்.இவர்களே இப்போது பெதனி சகோதரிகள் என அறியப்படுகின்றனர்.

பேராயரின் தொலைநோக்கு பார்வையால் குமரிமாவட்டத்தில் மலங்கரை சபை நற்செய்திப் பணியை செய்தபோது பெதனி சகோதரிகளும் நாளடைவில் தங்களை இணைத்துக் கொண்டு தங்கள் சிறப்பான பங்களிப்பை வழங்கினார். பற்பல தீமைகளால் உழன்றிருந்த மக்களை தங்கள் அளப்பரிய பன்முகப் பணிகள் விடுவித்து முழு மனித வாழ்வை நோக்கி வழிநடத்தினர்.தமிழ் பேசும் இப்பகுதி இன்று இன்னும் பரந்து விரிந்து மார்த்தாண்டம் மறைமாவட்டமாகஉருவெடுத்து தனது வெள்ளிவிழாவை காணும் இவ்வேளையில் இச்சமூகத்தோடு சேர்ந்து பெதனிதுறவற சகோதரிகளும் இறைவனுக்கு நன்றி கூறி மகிழ்கிறோம்.

## ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள்

1ü1ü1971 ல் அம்பிலிகோணம் என்னும் இடத்தில் பெதனி சகோதரிகள் தங்கள் பணிகளை ஆரம்பித்தனர்.பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் அவர்களால் அர்ச்சிக்கப்பட்ட இல்லத்தில் தங்கி பணியாற்றி வந்தனர்.ஆன்மீக ஏழ்மையில் மட்டுமல்ல பொருளாதார கல்வி மற்றும் நல வாழ்விலும் பின்தங்கிய நிலையிலேயே இப்பகுதி மக்கள் வாழ்ந்து வந்தனர்.

பசித்திருப்பவனுக்கு அப்பத்தின் வடிவத்தில் கடவுளைக் கொடு என்ற காந்திஜியின் வாக்குகளுக்கு இணங்க பல்வேறு வளர்ச்சிப்பணிகளை சகோதரிகள் முன்னெடுத்து நடத்தினர்.Sr. தெளதீஸ், Sr. ஸ்றத்தா, Sr.பெலீசியா, Sr.மங்கலா, மற்றும் Sr. பெனிட்டா ஆகியோர் இப்பகுதியில் அன்று பணியாற்றிய அருட்சகோதரிகள் ஆவர்.

கடவுளைப் பற்றியும் அருளடையாளங்கள் பற்றியும் கிறிஸ்தவ வாழ்வைப் பற்றியும் கற்பிக்கத் துவங்கிய சகோதரிகள் மக்களின் இதரத் தேவைகளையும் நிறைவு செய்ய பல முயற்சிகள் எடுத்தனர்.தோல் வியாதிகளை குணமாக்க ஒரு சிகிச்சை மையம் ஆரம்பிக்கப்பட்டது.தொடர்ந்து தையல் பயிற்சி மையம் ஆரம்பிக்கப்பட்டது.அன்று ஏராளமாக கிடைத்த பனை சார்ந்த கச்சாப் பொருட்களை பயன்படுத்தி பெட்டி முனையும் தொழிலகம் ஆரம்பிக்கப்பட்டது.இத்துடன் இணைந்து சிறு பிள்ளைகளை பராமரிக்கும் குழந்தைகள் காப்பகம் மற்றும் பாலர் பள்ளி ஆகியவையும் ஆரம்பிக்கப்பட்டது.அவ்வப்போது இளைஞர்கள் மற்றும் தாய்மார்களுக்கான பயனுள்ள முகாம்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

சிறுவழி இயக்கம், தாய் சேய் நலத்திட்டம் ஆகியவையும் சகோதரிகளால் நடத்தப்பட்டன.பிறரை எளிதாக தொற்றிக்கொண்டிருந்த தொழுநோய் கட்டுப்பாடு திட்டத்தை திறம்பட செய்து வந்தனர்.பத்தாம் வகுப்பு தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களுக்காக பல்வேறு பயிற்சிகள் ஒழுங்குபடுத்தி அவர்களை தேர்ச்சி பெற வைத்தனர்.முறைசாரா கல்வியும் சிறப்பாக நடைபெற்றது.வீடு கட்டும் பணியும்தொடர்ந்தது.அருகில் உள்ள பிற மையங்களுக்கும் சகோதரிகள் சென்று இந்த பணிகளை எல்லாம் செய்து வந்தனர்.

இக்காலகட்டத்தில் அம்பிலிகோணம் பங்குத்தந்தையாக அருள்திரு தோமஸ் கொம்பனால் அடிகளார் பணியாற்றி வந்தார். அங்கேயுள்ள. இறையழைத்தல் Sr. பிரசாந்தா SIC ஆவார்.

www.malankaralibrary.com

**நலவாழ்வுப் பணிகள்**

தந்தை லாரன்ஸ் தோட்டம் ஆரம்பித்த ஹோம் திட்டத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் பெதனி சகோதரிகள் பணியாற்றினர். கேரளாவில் துவங்கப்பட்ட இத்திட்டம் பின்னர் குமரி மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டன. ஒரு மனிதன் உடல் உள்ள ஆன்மீகம் மற்றும் சமூக நலனோடு வாழும் நிலையையே நலவாழ்வு என்று சொல்வது. இதன் தொடர்ச்சியாக Sr.ஸ்மிறுத்தா இயற்கை குடும்ப கட்டுப்பாடு பற்றி சிறப்பு பயிற்சி பெற்று குமரி மாவட்டத்திலும் அறிமுகப்படுத்தினார்கள் இது தொடர்பான வகுப்புகள் அவ்வப்போது நடைபெற்றன. Sr. எய்மார்று, Sr. கிறிஸ்பின், Sr. சுகுணா ஆகியோரும் இப்பணிகளில் ஈடுபட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

கன்னியாகுமரியில் உள்ள மலங்கரை பவன் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையால் வாங்கப்பட்டு அவ்வப்போது அவர் அங்கே வந்து தங்கியிருந்தார். 1977 ஆம் ஆண்டு முதல் பெதனி சகோதரிகள் இவ்விடத்தில் தங்கி நற்செய்திப் பணியாற்றி வந்தார்கள். தந்தை லாரன்ஸ் அன்று கிராத்தூர் பங்குத்தந்தையாகவும் புனித தோமையார் மருத்துவமனையின் இயக்குநராகவும் இருந்ததோடு மலங்கரை பவனின் பொறுப்பையும் கொண்டிருந்தார். அவரது வழிகாட்டுதலின்படி கன்னியாகுமரியின் அருகிலுள்ள காட்டுநாயக்கன் தெரு, குண்டல், மாதவபுரம் போன்ற கிராமங்களுக்கு சென்று இல்லங்கள் தோறும் ஏழை மக்களை சந்தித்து உரையாடினர். இதன் விளைவாக நாளடைவில் குண்டலில் ஒரு நர்சரி மையம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறே பல இடங்களில் முதியோர் கல்வி வழங்கும் முடிந்தது. அன்று பெதனி சகோதரிகளுடன் தமிழ் நன்கு கற்றிருந்த ஏ.சி துறவற சபையை சார்ந்த Sr. காண்டர்ட்டின் சேர்ந்து பணியாற்றினார்கள். எனவே பெதனி சகோதரிகள் தமிழ்மொழி நன்கு கற்க இது பெரும் வாய்ப்பாக அமைந்தது.

1978ஆம் ஆண்டு பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் அவர்களும் தந்தை லாரன்ஸ் தோட்டம் அவர்களும் கன்னியாகுமரியில் தங்கியிருந்த Sr. தெகியா, Sr. டொரின் ஆகியவர்களும் இணைந்து மீனாட்சிபுரத்தில் வசித்துவரும் திரு. கிறிஸ்டல் ஜான் அவர்களின் இல்லத்தில் வைத்து திருப்பலி நிறைவேற்றினர். இதுவே கிறிஸ்துவிளாகம் பங்கின் ஆரம்பம் எனலாம். தொடர்ந்து தந்தை சேவியர் ஞாயப்பள்ளி மற்றும் உதவிப் பங்குத் தந்தையாக இருந்த தந்தை கோசி வர்கீஸ் (பின்னர் ஜோஸ்வா மார் இக்னாத்தியோஸ்) ஆகியோர் திருப்பலி நிறைவேற்றி வந்தார்கள்.

**சிறு சுகாதார நிலையங்கள்**

1979 முதல் வடசேரியில் ஒரு வாடகை வீட்டில் வைத்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இக்காலகட்டத்தில் தான் தமிழக அரசின் சிறு சுகாதார மையங்கள் செயல்பட தொடங்கின. ஏற்கனவே நலவாழ்வில் அனுபவமும் ஆர்வமும் மிக்கவராக விளங்கி வந்தார் தந்தை லாரன்ஸ். பல தொண்டு நிறுவனங்களின் பொறுப்புகளையும் வகித்து வந்தார். எனவே நலவாழ்வை ஏராளமான கிராம மக்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சிறு சுகாதார நிலையம் என்ற கருத்தை நடைமுறைப்படுத்த இவரும் முன் வந்தார். ஒரு பயிற்சி பெற்ற முழு நேர பணியாளர், பகுதி நேர மருத்துவர், மூன்று களப்பணியாளர்கள் என ஐந்து பேரைக் கொண்டு ஒரு கிராமத்தில் ஆயிரம் குடும்பங்களை உள்ளடக்கிய இந்த மையங்கள் செயல்பட்டன. ‘நீ நலமாக’ என்று கூறி நோயாளர்களை குணப்படுத்திய இயேசுவின் அன்பை சாதாரண மக்களுக்கு உணரச் செய்ய இந்த பணிகள் சகோதரிகளுக்கு பெரிதும் வாய்ப்பாக அமைந்தது.

முன்னோடி திட்டமாக சிறு சுகாதார நிலையங்கள் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப பரிணாமப்பட்டு தான் இது வடிவம் பெற்றது. மட்டுமல்ல இக்காலகட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களில் தந்தை லாரன்ஸின் பரிந்துரைகளும் ஆலோசனைகளும் பெருமளவில் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டது என்பதே உண்மை. இவ்வாறு கன்னியாகுமரி மலங்கரை

www.malankaralibrary.com

பவனில் தங்கியிருந்த சிஸ்டர் மெல்காவால் பல அருட்சகோதரிகளின் உதவியால் 15 சிறு சுகாதார நிலையங்களை ஏற்படுத்த முடிந்தது. இவை முறையே மந்தாரம்புதூர், ஈத்தங்காடு, வாத்தியார்விளை (இன்றைய கிறிஸ்துவிளாகம்), பெருவிளை, கன்னியாகுளம், பாறையடி, பறக்கை, கோயில்விளை, ஜேம்ஸ் டவுன், வாரியூர், குமாரபுரம்- தோப்பூர், வெள்ளமடம், தோவாளை, இராமபுரம், இறச்சகுளம் ஆகியவை ஆகும். முழுநேர ஆண் பணியாளராக இருந்த மையங்களில் தங்கி பணிபுரிய கிராத்தூரைச் சார்ந்த ரசல் ராஜ், விஜயன், ஸ்டீபன், சார்லஸ், ஜெஸ்டஸ் மற்றும் நடைக்காவூச் சார்ந்த ஜார்ஜ் ஆகியோர் வந்திருந்தனர்.

ஏற்கனவே மலங்கரை சபையை தழுவியிருந்த இவர்கள் வடசேரியில் நடைபெற்று வந்த திருப்பலியில் பங்கேற்பது மட்டுமல்லாமல் பல வகைகளில் நம் பணிகளில் பெரும் உதவியாக இருந்தனர். வாத்தியார் விளையில் தங்கி பணிபுரிந்த ஜோசப் தம்பிராஜன் சிறப்பான பணிகளையும் மறக்கமுடியாது. இந்த மையங்கள் வழியாக தொழுநோய் ஒழிப்பு, ஊனம் தடுத்தல், ஊட்டச்சத்து வழங்குதல் போன்ற தேவையான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

**கிறிஸ்துவிளாகம் பங்கு**

தற்பொழுது கிறிஸ்துவிளாகத்தில் அமைந்திருக்கும் பங்கின் ஆரம்பம் 1978ஆம் ஆண்டு குறிக்கப்பட்டது என பார்த்தோம். சிஸ்டர் மெல்கா, சிஸ்டர் தெகியா ஆகியோர் தந்தை லாறன்ஸின் வழிகாட்டுதலின்படி தட்டான்விளை, இடலாக்குடி, கிருஷ்ணன்புதூர், இராமன்புதூர் ஆகிய இடங்களில் இல்லங்கள் சந்தித்து கிராத்தூர் பங்கைச் சார்ந்த மக்கள் யாராவது இருக்கிறார்களா என்று தேடினர். இந்த தேடலின் விளைவாக திரு. தாமஸ் குடும்பத்தினர் மற்றும் மாவட்ட நலவாழ்வு அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த திரு. டைட்டஸ், சிறு சுகாதார நிலையத்தில் பெண் பணியாளராக வேலை பார்த்துவந்த திருமதி ஜெசிந்தா இன்னும் பலர் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்கள் ஆர்வமுடன் பெதனி சகோதரிகளுடன் பணியாற்றியது கிறிஸ்துவிளஅகம் பங்கிற்கு குறிப்பாகவும் அருகில் உள்ள பணித்தளங்களுக்கு பொதுவாகவும் பேருதவியாகவும் இருந்தது. தந்தை லாரன்ஸின் தொடர் முயற்சிகளும் ஊக்குவித்தலும் நாளடைவில் பலனைக் கொடுத்தது. கிறிஸ்துவிளாகத்தில் சாலை அருகில் அமைந்திருந்த திரு சத்திய நேசன் என்ற போதகர் தனது அறையை விற்க இருப்பதாக திரு தாமஸ் வழியாக செய்தி கிடைத்தது. எனவே அந்த இடம் வாங்கப்பட்டு மலங்கரை ஆராதனை நடைபெற்றது.

மலையாள மொழிகளில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு வந்தச் சூழலில் 1981 முதல் தந்தை மரிய அற்புதம் தமிழில் திருப்பலியை தொடர்ந்தார். கிறிஸ்துவிளாகம் இன்று நாகர்கோவில் மறைவட்டத்தின் மையமாக விளங்குகிறது. சிஸ்டர் மெல்கா, சிஸ்டர் நிர்லீனா மற்றும் பல பெதனி துறவற சகோதரிகளின் பங்களிப்பு இச்சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும் அன்புறவிலும் முக்கிய பங்கு வகித்தது. இப்பங்கிலிருந்து இறையழைத்தல் பெற்ற சிஸ்டர் மரிய கிரேசி டி.எம் இவர்கள் தன்னலமற்ற பணிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

1979 மார்ச் மாதம் 31ஆம் நாள் மந்தாரம்புதூரில் ஒரு வாசிப்பு சாலையில் சிறு சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து மலையடிவாரத்திற்கு அது அது மாற்றப்பட்டது. நாளடைவில் ஒரு ஆலயம் கட்டப்பட்டு திருப்பலியும் செபங்களும் சிறப்பாக நடைபெற்றன. இன்று இது பொலிவுடன் தோற்றமளிக்கிறது.

**தந்தை லாரன்ஸ் ஆயர் நிலைக்கு உயர்த்தப்படலும் பணிப் பொறுப்புகளும்**

1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இருபத்தி ஏழாம் நாள் மறு ஒன்றிப்பின் பொன் விழாக் கொண்டாட்டங்களின் சூழலில் தந்தை லாரன்ஸ் திருவனந்தபுரம் உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். எதற்கும் முன்னின்று உடனடி உதவி செய்து அனைத்தையும் பொறுப்பேற்றிருந்த தந்தை லாரன்ஸின் இந்த புதிய பணிப்பொறுப்பு பெதனி சகோதரிகளின் இப்பகுதியில் உள்ள செயல்பாடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆயர் லாரன்ஸ்

www.malankaralibrary.com

திருவனந்தபுரத்திலே தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் 15 சுகாதார நிலையங்களில் நேரடிப் பொறுப்பு சிஸ்டர் மெல்காவிடம் ஒப்படைக்கப்பட்டது. தொழுநோய் கட்டுப்பாட்டிலும், சிகிச்சையிலும் சிறப்பு பயிற்சி பெற்று திரும்பிய சிஸ்டர் நிர்லீனா இப்பகுதிகளில் சிறப்பாக பணியாற்றிய மற்று பணியாளர்களுக்கும் பயிற்சி கொடுத்தார்கள். நாளடைவில் பலர் இயேசுவை ஏற்றுக்கொள்ள புது நற்செய்தி மையங்கள் உருவாகின. பதினெட்டாம்படி, செட்டிகுளம், ஆரல்வாய்மொழி, குமாரபுரம், ஆளூர், தேனிக்குளம், பூதப்பாண்டி முதலான இடங்களில் ஜெபங்களும் திருப்பலியும் நடைபெற்றன. இப்பணிகளுக்கெல்லாம் பெரும் உதவியாக நாகர்கோவிலைச் சார்ந்த திரு அண்ணாதுரை இருந்து வந்தார்கள். இக்கால கட்டத்திலும் ஆயர் லாரன்ஸ் அடிக்கடி குமரி மாவட்டத்திற்கு வந்து நற்செய்திப் பணிகளுக்கு ஊக்கமும் வழிகாட்டுதலும் வழங்கி வந்தார்கள்.

1986 ஆம் ஆண்டு குமாரபுரத்தில் சிறிய அளவில் ஒரு நர்சரி பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. செட்டிகுளம் ஓடைக்கரையில் 1980ஆம் ஆண்டு முதல் அமைந்திருந்த வழிபாட்டுத் தலத்திலும் மழலையர் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. கடவுளின் அன்பை ஜெபம், நலவாழ்வு பணி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் வழியாக இப்பகுதி மக்கள் அனுபவித்தறிய பெதனி சகோதரிகள் தொடக்க காலங்களில் பணியாற்றினர். தொடக்க காலத்தில் செட்டிகுளத்தில் சின்னம்மா பாட்டி மிக உதவியாக இருந்தார்கள்.

### பார்வதிபுரம் தைநேசி மாதா திருத்தலம்

பார்வதிபுரத்தில் ஓங்கி உயர்ந்து நிற்கும் ஆலய முகப்புடன் அமைந்திருக்கும் தைநேசி மாதா திருத்தலத்திற்கு ஒரு வரலாறு உண்டு. இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொள்ளும் இறை சமூகங்களை தோற்றுவிப்பதில் அமிதமான ஆர்வம் கொண்டிருந்த ஆயர் லாரன்ஸ் அதற்கான வாய்ப்புகளை தேடிக்கொண்டிருந்தார். அவரின் ஆர்வமிக்க தூண்டுதலால் கவரப்பட்ட சிஸ்டர் மெல்கா பார்வதிபுரம் பகுதியிலுள்ள பல குடும்பங்களை சந்தித்து வந்தார். அவ்வாறு இறைபராமரிப்பில் ஒரு இந்து மத பெரியவரால் சுட்டிக்காட்டப்பட்டதே இந்த புனித இடம். அன்று ஒரு தம்பதியர் இந்த இடத்தில் அமைந்திருந்த கற்சிலுவையை ஒட்டிய இடத்தில் வாழ்ந்து வந்தனர். சிஸ்டர் மெல்கா அவர்களை உடனே சந்தித்து அன்பு உரையாடல் நடத்தி ஆயர் லாரன்ஸின் வழிகாட்டுதலில் 1987ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் நாள் தொடங்கப்பட்டதே இத்திருத்தலம். பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இது நிறுவப்பட்டது. அங்கு வாழ்ந்திருந்த தம்பதியருக்கு மாற்று இடம் வாங்கி கொடுக்கப்பட்டது. ஆயர் உதவியுடன் சிறு குடிசை அமைத்து வழிபாடுகள் தொடங்கப்பட்டன. ஜாதி மத இன வேறுபாடுகளைக் கடந்து அப்பகுதி மக்கள் மிகவும் தன்னம்பிக்கையும் பற்றும் வைத்திருக்கும் இறைபிரசன்னத்தில் ஒரு இடமாக இது திகழ்கிறது.

இதோடு தொடர்புடைய பெருவிளை அருளாளர் தேவசகாயம் பிள்ளையின் புனித இடமும் 1987ஆம் ஆண்டு விலைக்கு வாங்கப்பட்டு 1996ஆம் ஆண்டு முதல் மக்கள் வழிபாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. புனிதரின் வாழ்வின் துன்பங்களோடு மிக நெருக்கமான இவ்விடத்தில் இன்று திருப்பலி, நவநாள், ஜெபமாலை, நற்கருணை ஆராதனை ஆகியன நடைபெற்று வருகின்றன. பெதனி சகோதரிகள் இவை அனைத்திற்கும் உறுதுணையாக இருந்து செயல்பட்டு வருகின்றனர்.

### தேனிக்குளமும் இறை அழைத்தலும்

கிறிஸ்துவிளாகம் திரு வர்கீஸ் குடும்பத்தாரின் உதவியுடன் 1982ல் தேனிக்குளம் பங்கு ஆரம்பிக்கப்பட்டது. நாஞ்சில் நாட்டின் நெற்பயிர்களால் சூழப்பட்டு குளத்தங்கரையில் அமைக்கப்பட்டிருந்த சிற்றாலயத்தில் பெதனி சகோதரிகள் நற்செய்திப் பணியாற்றினார்கள். நாளடைவில் இந்த ஆலயம் சாலை ஓரத்திற்கு மாற்றப்பட்டு பொலிவுடன் குருசடியுடன் அமைந்திருக்கிறது. தங்கள்

www.malankaralibrary.com

அர்ப்பண வாழ்வாலும் வழிகாட்டுதலாலும் மக்களை கவர்ந்த அருட்சகோதரிகள் இறையழைத்தலையும் ஊக்கப்படுத்தினார். இதன் விளைவாக தேனிக்குளம் திரு. ராஜ், திருமதி. எலிசபெத் அவர்களின் புதல்வி பெதனி துறவற சபையில் சேர்ந்து அருள்சகோதரி சானித்தியா SIC ஆக இறைபணியாற்றுகிறார்.

1982 ஆம் ஆண்டு ஆளூர் புன்னவிளையில் ஒரு சிறு சமூகம் கிறிஸ்தவ போதகர் ஒருவரின் பொறுப்பில் வாழ்ந்து வந்தனர். இச்சமூகம் மலங்கரை சபையில் இணைய விருப்பம் தெரிவிக்கவே ஆயர் லாரன்ஸ் முன்னிலையில் சபையில் முறைப்படி சேர்க்கப்பட்டனர். இதன் தொடக்க காலம் முதல் பெதனி சகோதரிகள் நாகர்கோவில் மடத்திலிருந்து வந்து இறைபணி செய்து வந்தனர்.

குமரி மாவட்டத்தில் மலங்கரை சபை நற்செய்தி அறிவிக்க தொடங்கிய காலம் முதல் அருள் சகோதரிகளுடனும், அருள்பணியாளர்களுடனும் மிக நெருக்கமாக இணைந்து செயல் படுபவர்கள் மரியாசி – நாடான் சார்சன் மக்கள் திரு. கிறிஸ்டல் ஜான் மற்றும் திரு கிறிஸ்டல் ஆன்றணி ஆகியோர் குடும்பங்கள். ஒரு காலத்தில் தாங்கள் வாழ்ந்து கொண்டிருந்த பூதப்பாண்டியில் உள்ள இல்லத்தை திரு. கிறிஸ்டல் ஜான் ஆசிரியர் ஒரு சிற்றாலயமாக மாற்றி இறை பணி தொடர வழி வகுத்தார். இதன் விளைவாக 1989ஆம் ஆண்டு பூதப்பாண்டியில் புது சபை சமூகம் உருவானது.

நற்செய்திப் பணியில் பொது நிலையினர் எந்த அளவுக்கு ஈடுபட முடியும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவே இன்றும் விளங்கும் இவர்கள் குடும்பத்திலிருந்து அருள்சகோதரி அனிலா கிறிஸ்டி டிஎம் இறையழைத்தல் பெற்று முக்கிய பொறுப்புகளை வகிப்பது இவர்கள் கொண்டிருக்கும் ஆழமான இறை நம்பிக்கையின் வெளிப்பாடு எனலாம். இங்கெல்லாம் தொடக்கக் காலங்களில் பெதனி சகோதரிகள் ஆற்றிய பணிகள் சிறப்பானவை.

2014ஆம் ஆண்டு காலத்தில் கள்ளிகுளத்தில் ஏற்படுத்தப்பட்ட நைஸ் நகர் மலங்கரை சமூகத்திலும் பெதனி சகோதரிகள் இணைந்து பணியாற்றினார்கள். தொடர்ந்து இச்சமூகத்தை இறைநம்பிக்கையிலும் பிறரன்பிலும் கட்டியெழுப்புவதில் தங்கள் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

**குமாரபுரம் மனநலம் குன்றியோர் பராமரிப்பு மையம்**

À"“– ல் குமாரபுரம் பங்கு தளம் ஆரம்பமானது முதல் பெதனி சகோதரிகள் அருகிலேயே கன்னியர் இல்லம் அமைத்து பலதரப்பட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். காலப்போக்கில் தேவைகளை உணர்ந்து மனநலம் குன்றிய மக்களுக்கான ஒரு ஆசீர் இல்லம் தொடங்கி செயல்படுத்தி வருகின்றனர். மக்களுக்கு இறைநம்பிக்கை பகிர்வதற்கான படிப்பினைகளையும் சூழ்நிலைகளையும் உருவாக்குவதோடு பங்கை கடந்து அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் இத்தகைய மனித நேயப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

**பெதனி மடம் முக்கம்பாலை**

பெதனி சகோதரிகள் Cheshirehome Clinic கிளினிக் நடத்தி வருகின்றனர்.

பெரும்பாலான ஆண்டுகளில் சொந்தமான கட்டிடம் இல்லாத சூழ்நிலையில் வாடகை வீடுகளில் தங்கி பணி புரிந்தனர். 1980-களில் வெள்ளாளர் காலனி சாந்திநிகேதன் வீட்டிலும், 1982ல் புத்தேரி கலுங்கடியிலும், 1985 களில் பள்ளிவிளையிலும் வாடகை இல்லங்களையே தங்கள் உறைவிடங்களாக்கி செயல்பட்டு வந்தனர். இறை பராமரிப்பினால் இன்று சொந்தமான இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரியது.

சிஸ்டர் ஏபலுக்கு இறையழைத்தல் கிடைத்தது சிஸ்டர்களிடம் நின்று பிளஸ் டூ படித்ததனாலாகும். கன்னியாகுமரியில் அமைந்திருக்கும் சாந்திதான் பெத்தானியா வழியாக பல சமூகப் பணிகள் செய்யப்படுகின்றன.

www.malankaralibrary.com

சிஸ்டர் ஏபல் மற்றும் பிற சகோதரிகள் இப்பணிகளை முன்னெடுத்து நடத்தி வருகின்றனர். ஆரம்பப் பள்ளி நிறுவி அருகில் உள்ள பிள்ளைகள் பயன்படச் செய்கின்றனர் பெதனி சகோதரிகள். 2004ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட சுனாமி பேரிடரின் போது மாதங்களாக ஆதரவற்ற மக்களுக்கு உணவு உறைவிடம் வழங்கி பராமரித்தனர். அருகிலுள்ள மலங்கரை பங்குகளுக்கு சென்று ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுகின்றார். குறிப்பாக பெதனி சகோதரிகளின் இல்லங்கள் அமைந்திருக்கும் கிறிஸ்துவிளாகம் போன்ற பகுதிகளில் ஆதரவற்ற ஏழை மக்களுக்கு உணவு மற்றும் பலவகை உதவிகளை ஆன்மீகப் பணிகளாகச் செய்து வருகின்றனர்.

**எதிர்நோக்கும் பயணம்**

நற்செய்திப் பணி கடவுளின் பணி. உழைப்பவர் எவராக இருந்தாலும் பலன் அளிப்பவர் கடவுளே. உலகக் கண்ணோட்டத்தில் தோல்வி என்று காணப்படுபவரை இறைத்திட்டத்தில் விலை உடையவை. அவ்வாறு பெதனி சகோதரிகளின் ஒத்துழைப்போடு ஆரம்பிக்கப்பட்ட தோவாளை, ஈத்தங்காடு, மாதவபுரம், பதினெட்டாம்படி மற்றும் பல மையங்கள் இன்று இல்லாமலேயே போய் விட்டன எனக் கூறலாம். இருப்பினும் இறை நம்பிக்கையோடு கடவுளின் பராமரிப்பை உணர்ந்தவர்களாக கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்டு எதிர் நோக்குடன் முன்னோக்கி பயணிக்கின்றனர் பெதனி சகோதரிகள். உடனிருந்து வழிநடத்தும் எல்லாம் வல்ல இறைவன் எங்கள் பணிகளை தொடர்ந்து ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்.

Sr.Melka SIC